பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 24 | செவ்வாய்க்கிழமை | 09.12.2025 | அதிர்வு 131

## பேரிடரையடுத்து இலங்கையர் தின நிகழ்வுகள் இரத்து?



அடுத்தவாரம்நடத்துவதற்குத்திட்டமிடப்பட்டிருந்த இலங்கையர் தின நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட பேரிடர் 06

# யாழில் அமைதியைச் சீர்குலைக்கச் சதி! அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது!!

## ‘அணையா விளக்கு’ தூபி சேதமாக்கப்பட்டமைக்கு எதிராக அமைச்சர் சந்திரசேகர் கடும் கண்டனம்


யாழ்ப்பாணம் - செம்மணியில் அமைக்கப்பட்டிருந்த ‘அணையா விளக்கு’ போராட்ட நினைவுத் தூபி இனந்தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டமை சமூக ஒற்றுமைக்கும் ஜனநாயக மதிப்புகளுக்கும் எதிரானது என்று கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில்நிலவும்அமைதியைச்சீர்குலைக்கச்சிலர்சூழ்ச்சிசெய்கின்றனர் என்றும், அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். 06



# அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும்

## நாங்கள் பிரிந்து நிற்பதால் எதையும் சாதிக்கப் போவதில்லை; அது மாற்றுச் சக்திகளுக்கே சாதமாகிவிடும் என்கின்றார் சித்தர்



“தமிழ்த் தேசியத்தின்பால் செயற்படும் அனைத்து தமிழ்க் கட்சிகளையும் இணைத்து செயற்படுத்துவதை நாம் விரும்புகின்றோம். இதற்காக ஏற்கனவே இணைந்து செயற்படும் கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். அவ்வாறே தற்போது அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்வதற்காகச் சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றன.”

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு மற்றும் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் கேட்டபோதே 06




நீதிமன்றங்களில் விசாரணைகளை எதிர்நோக்கி இருக்கும் விடயங்களை மன்றுக்கு வெளியே கையாள்வதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். அசிரத்தையாக இருக்க முடியாது.

நீதிமன்றுக்கு வெளியே எடுக்கப்படும் நடவடிக்கைகள் நீதிமன்றம் மீது முறையற்ற அழுத்தத்தையோ கட்டாயத்தையோ ஏற்படுத்துவனவாக இருந்தால் அந்த நடவடிக்கைகளை நீதிமன்ற விடயத்தில் அழுத்தம் பிரயோகித்துத் தலையிடும் செயலாகவோ அல்லது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையாகவோ கருதி, நீதிமன்றம் அத்தகைய செயற்பாட்டுக்கு எதிராக தோதான பதில் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

நீதிமன்றில் இருக்கும் விவகாரங்களை ஒட்டிய செய்திகளை வெளியிடும்போது ஊடகங்கள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

நடந்த விடயங்களைத் தன் வாசகர்களுக்கு அல்லது மக்களுக்கு விரைந்து கொடுக்க வேண்டும் என்ற அவசரத்திலே ஊடகங்கள் 06

ஒன்றாக
முன்னோக்கி

# செய்தி தொடர்பில் 'முரசு' தன்னிலை விளக்கம்

"யாழ். பழைய பூங்காவுக்குள்தான் உள்ளக விளையாட்டரங்கு வேண்டும் – மாவட்ட செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர்" என்ற தலைப்பில் நேற்று "மாலை முரசு" நாளிதழின் நான்காம் பக்கத்தில் படங்களுடன் வெளியான செய்தி குறித்து பின்வரும் தன்னிலை விளக்கங்களை சட்ட ஆலோசனைக்கு அமைய முரசு ஆசிரிய பீடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

1.இந்த விவகாரம் நீதிமன்றின் விசாரணையில் இருப்பதால் அது தொடர்பில் செய்தி வெளியிடும் போது மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும் என்ற சட்டக் கடப்பாட்டை முரசு உள்வாங்கி உணர்ந்து ஏற்றுக் கொள்கின்றது.

2. நீதிமன்றத்தின் சுயாதீனமான செயற்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்திலோ அல்லது நீதிமன்றம் மீது முறையற்ற அழுத்தம் பிரயோகிக்கு விதத்திலோ செய்தி பிரசுரங்கள் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்பதை முரசு புரிந்து கொள்கிறது.

3.ஆயினும் இவ்விடயத்தில் நடந்த சம்பவங்களை வாசகர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கில் மட்டுமே இந்தச் செய்தி பிரசுரமானது.

4. இந்தச் செய்தியை பிரசுரித்ததன் மூலம் முறையற்ற விதத்தில் நீதிமன்ற நடவடிக்கையில் முரசு அழுத்தத்தை பிரயோகிக்க முயன்றது என்று கருத வேண்டாம் என்றும் அத்தகைய எண்ணம் முரசுக்கு இருக்கவில்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றோம்.

5.நீதிமன்றில் விசாரணைக்கு உள்ளாகியிருக்கும் ஒரு விடயத்தில் நீதிமன்றம் மீது முறையற்ற அழுத்தம் பிரயோகிக்கும் விதத்திலோ அல்லது அப்படி அழுத்தம் பிரயோகிக்கும் உள்நோக்கம் கொண்ட ஒரு தரப்புக்கு உதவும் விதத்திலோ இந்தச் செய்தி பிரசுரமாகி இருக்கின்றது என நீதிமன்றமோ அல்லது வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்புகளோ கருத்துமாயின் அதற்காக எங்கள் மன வருத்தத்தை நேரத்துடனேயே – உடனடியாகக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே – வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

6. வாசகர்களுக்கு நடந்த விடயத்தை தெரியப்படுத்த வேண்டும் என்ற ஒரு நோக்கத்தில் மட்டுமே அந்த செய்தி பிரசுரிக்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கையில் முறையற்ற விதத்தில் தலையிடும் எண்ணம் முரசுக்கு இருக்கவேயில்லை என்பதையும் தெளிவாக உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

- ஆசிரியர் -

# கிளிநொச்சி குடும்பஸ்தர் எலிக்காய்ச்சலால் மரணம்!

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ள நிலையில், அவரது உயிரிழப்புக்கு எலிக்காய்ச்சலே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கண்ணகி நகரைச் சேர்ந்த, கண்டாவளை பிரதேச செயலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றும் ப.கிருபாகரன் (வயது 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அவர், தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரது குருதி மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில், அவருக்குஎலிக்காய்ச்சல்இருந்தமைகண்டறிப்பட்டுள்ளது.

அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

# எங்களுக்குத் தெரிந்த காலத்தில் இருந்து இந்தளவு பாரிய அனர்த்தம் ஏற்பட்டதில்லை

## ராஜித்த சேனாரத்ன தெரிவிப்பு



"நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தம் எமக்கு தெரிந்த காலத்தில் இருந்து இந்தளவு பாரிய அனர்த்தம் ஏற்பட்டதில்லை. நாட்டு மக்களில் நூற்றுக்கு 10 வீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் காரியாலயத்தில் நேற்று திங்கள்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

"நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தம் எமக்கு தெரிந்த காலத்தில் இருந்து இந்தளவு பாரிய அனர்த்தம் ஏற்பட்டதில்லை. நாட்டு மக்களில் நூற்றுக்கு 10 வீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மற்றும் காணாமல் போயுள்ளவர்களின் சரியான தொகை இதுவரை கணக்கிட முடியாமல் போயிருக்கிறது. நாளுக்கு நாள் மரண எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எமது காலத்தில் பல சந்தர்ப்பங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறும்போது, நாங்கள் அதற்கு தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுவந்திருக்கிறோம்.

அதனால் வெள்ளப்பெருக்கு, சூறாவழி, மணிசரி போன்ற அனர்த்தங்களால் ஏற்படும் ஆபத்துக்களை எம்மால் குறைக்க முடியுமாகி இருந்தது. அதேபோன்று தற்போது இடம்பெற்ற அனர்த்தம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன்னரே வளிமண்டலவியல் திணைக்களம் இதுதொடர்பில் பல தடவைகள் எதிர்வுகூறி இருக்கின்றது.

அதேபோன்று சர்வதேச ஊடகமான சி.என்.என், எமது நாட்டுக்கு 500 மில்லி மீட்டர் வரை மழை பெய்யும் என கடந்த மாதம் 25 ஆம் திகதி அறிவித்திருந்தது.

காலநிலை அவதான நிலையம் மற்றும் சர்வதேச ஊடகங்களின் எதிர்வுகூறல்கள் தொடர்பில் அரசாங்கம் செயற்பட்டு, முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந்தால், தற்போது ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளில் நூற்றுக்கு 80 வீதம் குறைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அரசாங்கம் அவ்வாறு செயற்பட தவறி இருக்கிறது.இதுதொடர்பில் போதிய அனுபவமின்மையே இதற்கு காரணமாகும்.

அதேநேரம் பாதிக்கப்பட்ட மற்றும் அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அதேநேரம் பாதிப்புகளுக்கு அமைய எவ்வளவு தொகை நட்டஈடாக வழகப்போகிறோம் என்ற அளவையும் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி அறிவித்த பிரகாரம் பாதிக்கப்பட்ட மக் களக்கு நட்டஈடு வழங்கப்படுமாக இருந்தால், அதனை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அறிவித்துள்ளதன் பிரகாரம் நட்டஈடு வழங்குவதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்கிறதா என்பதே எமக்குரிய கேள்வியாகும்." என்று தெரிவித்தார்.





# பதில் பிரதம நீதியரசராக யசந்த கோதாகொட நியமனம்

உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொட பதில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க முன்னிலையில் அவர் பதில் பிரதம நீதியரசராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரதம நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன வெளிநாடு சென்றுள்ள நிலையில் ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

# இன்று முதல் 12 ஆம் திகதி வரை மழையுடனான வானிலை அதிகரிக்கும்



இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை மழையுடனான வானிலை அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் 75 முதல் 100 மில்லி மீற்றர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் சில பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கண்டி, கேகாலை, குருணாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 30 பிரதான நீர்த்தேக்கங்கள் தற்போது வான்பாய்கின்றன என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.









# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார் ஜனாதிபதி

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நுவரெலியா மற்றும் பதுளை மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்தித்துள்ளார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள நுவரெலியா Cinecitta மண்டபத்தில் அமைந்துள்ள பராமரிப்பு நிலையத்திற்கு நேற்று பிற்பகல் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அந்த மக்கள் தொடர்பான தகவல்களை கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து , ரேந்தபொல பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, சேதமடைந்த வீதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி குறித்தும் ஆராய்ந்தார் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.











# பொதுப் போக்குவரத்து சேவைகள் மாத இறுதியில் வழமைக்கு திரும்பும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதி



பொதுப் போக்குவரத்துச் சேவைகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் பெரும்பாலும் இயல்பு நிலைக்குக் கொண்டுவர அரசாங்கம் எதிர்பார்ப்பதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

100 சதவீதம் மீளமைப்பு சவாலானதாக இருந்தாலும், ஆண்டின் இறுதிக்குள் அனைத்து வழித்தடங்களிலும் பஸ் சேவைகளை மீண்டும் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.

ரயில் சேவைகளை இந்த மாத இறுதிக்குள் சிலாபம் வரை மீண்டும் தொடங்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சிலாபம் சாலைக்கு விஜயம் செய்தபோது அவர் இதனை தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டம் முழுவதும் போக்குவரத்தைத் துண்டித்த இரணைவில் பாலம் முழுமையாக அழிந்ததைப் பற்றி குறிப்பிட்ட அமைச்சர், இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன், எதிர்வரும் 20ஆம் திகதிக்குள்அந்தஇடத்தில்ஒருபெய்லிப்பாலத்தை அமைக்க முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன்,அண்மையில்ஏற்பட்டவெள்ளப்பெருக்கின் போது நீரில் மூழ்கிய ஒரேயொரு இலங்கை போக்குவரத்துச் சபையில் பஸ் சாலையாக சிலாபம் பஸ் சாலை மட்டுமே உள்ளதாகவும், இதனால் பல பஸ்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சில சமயங்களில் முந்திக் கொண்டு செயல்பட்டு, தவறிழைத்து விடுவது உண்டு.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றைக் கட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை இப்போது யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்குரிய விடயமாக மாறி, நிலுவையில் இருக்கின்றது.

அது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊர்வலமும், அந்த ஊர்வலத்தை ஒட்டி சிலர் அளித்த ஊடக செவ்விகளும் இவ்விவகாரத்தில் நீதிமன்றம் மீது முறையற்ற அழுத்தத்தை பிரயோகிக்கும் நடவடிக்கையாக அர்த்தப்படுத்தப்பட்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன எனத் தெரிகின்றது.

ஆயினும் நேற்று இது தொடர்பான செய்தியை மாலை முரசு வெளியிட்டமை நீதிமன்றம் மீது முறையற்ற அழுத்தம் பிரயோகிக்கும் உள்நோக்கம் கொண்டதல்ல. நடந்த விடயங்களை தன் வாசகர்களுக்கு முந்திக் கொண்டு கொடுக்க வேண்டும் என்ற அவசரத்தில் இடம்பெற்ற விவகாரம் என்பதை முரசு நாளிதழ் தனியான பெட்டிச் செய்தி ஒன்றின் மூலம் இன்றைய காலை முரசில் தெளிவுபடுத்தி இருக்கின்றது.

ஆயினும், கூட இது தொடர்பான விவகாரம் நீதிமன்ற அவமதிப்பு வழக்காக மாறினால், அதில் ஒரு எதிராளியாக முரசு நிறுத்தப்படக்கூடிய வாய்ப்பு இல்லை என்று கூறி விட முடியாது என சட்ட ஆலோசனைகள் தெரிவிக்கப்படுகின்றன.

முரசு தனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பிலேயே இந்த விவகாரத்தை பகிரங்க அறிவிப்பு மூலம் திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்தமையால், விவகாரத்தில் நீதிமன்றத்தின் பார்வை முரசு மீது பரிவோடு அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆயினும், நீதிமன்ற விவகாரத்தை அரசியலாக்க முனைந்த தரப்புக்கள் – இந்த விவகாரத்தைப் பயன்படுத்தி உள்கட்சி மோதலின் காழ்ப்புணர்வை வெளியே காட்ட முயன்ற தரப்புக்கள் – நிச்சயமாக நீதிமன்றப் படியேறக் கூடிய வாய்ப்புகள் தாராளமாக இருக்கின்றன என்று தெரிகின்றது.

அதனுடன் சேர்ந்து முரசும் ஏற வேண்டுமா என்பதுதான் எங்களைப் பொறுத்தவரை இப்போது தொக்கி இருக்கும் கேள்வி.

பார்ப்போம் நடப்பவற்றை.

---

### யாழில் அமைதியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும், வரலாற்று நினைவுகளையும் பிரதிபலிக்கும் முக்கியமான அடையாளமாக அமைந்துள்ள இந்தத் தூபியைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட சேதம், சமூக ஒற்றுமைக்கும் ஜனநாயக மதிப்புகளுக்கும் எதிரானது.

இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டவர்களைவிரைவில்அடையாளம்காணவேண்டியது கட்டாயம். அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்

யாழ்ப்பாணத்தில் நிலவும் அமைதி மற்றும் சமூக ஒற்றுமையை எந்தவித மான எதிர்மறை கைகளும் பாதிக்க அரசு அனுமதிக்காது.

மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் இப்படியான நடவடிக்கைகளைத் தடுக்கச் சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியம்.” – என்றார்.

---

### பேரிடரையடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையை அடுத்தே ஜனாதிபதியால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையர்தின நிகழ்வுகளை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட 300 மில்லியன் ரூபாவை நிவாரண நடவடிக்கைக்கு பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12,13 மற்றும் 15 ஆம் திகதிகளில் இலங்கையர் தின நிகழ்வை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

---

### அனைத்து தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்றத் தேர்தலுக்கு அப்பால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மாற்றுக் கட்சிகளை ஆதரித்தவர்களின் மனவெளிப்பாடுகள் தொடர்பாக மக்கள் அதிருப்தியடைந்துள்ளதைநாங்கள்அறிந்துகொண்டதுடன் மக்களே எம்மை நோக்கி வருவதையும் நாம் அவதானித்து வருகின்றோம்.

இவ்வாறான சூழலில் அடுத்தகட்ட நகர்வுகளை மக்களின் தேவைகளை நாம் நிறைவேற்றிகொள்வதற்கு நாங்கள் முதலில் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ளது. அந்தவகையில் நாம் சந்திப்புகளில் ஈடுபடுகின்றோம். சந்திப்புகளின் போதும் ஒன்றிணைந்து செயற்படுவதையும், மாகாண சபைத் தேர்தல், அரசமைப்பு தொடர்பாகப் பேசி வருகின்றோம்.

அடுத்த கட்டமாக தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரே குடையின் கீழ் செயற்பட வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நாங்கள் பிரிந்து நிற்பதால் எதையும் சாதிக்கப் போவதில்லை. நாங்கள் பிரிவது மாற்று சக்திகளுக்கே சாதமாக மாறிவிடும். இதனால தமிழ் மக்களின் கோரிக்கைகள், அரசியல் தீர்வு விடயங்கள் அடிபட்டுப் போகும் நிலையை ஏற்படுத்திவிடும். எனவே, இதற்கு நாங்கள் இடம்கொடுக்கக் கூடாது. எமது ஒற்றுமையைத்தான் எமது மக்களும் சர்வதேச நாடுகளும் விரும்புகின்றன. எனவே, நாம் அதை நோக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம் .

தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குத் தேர்தல் காலத்தில் கூறிய வாக்குறுதிகளில் ஏதாவது செய்தார்களா? இதுவரை செய்யாதவர்கள் இனியும் செய்வார்களா என்றால் அதனை இல்லை என்றே கூறவேண்டும். தேர்தலுக்காகக் கூறியவை தேர்தலுடனே சென்றுவிட்டது. மாகாண சபைத் தேர்தலின்போதும் இதுவே நடக்கும்.

காலத்துக் காலம் காலத்தைக் கடத்துகின்ற செயற்பாட்டையே ஆளும் தரப்பினர் செய்து வருகின்றார்கள். எனவே நாங்கள் தமிழ்த் தேசியக் கட்சியாக ஒரே குடையின் கீழே செயற்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றோம்.” – என்றார்.





# வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை மீளக்கட்டியெழுப்புவது நம் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பு

## வடக்கு அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் ஆளுநர் சுட்டிக்காட்டு

“வடக்கு மாகாணத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்குக் கரங்கொடுத்து, அவர்களை மீட்டெடுத்து வாழ்வாதாரத்தை உறுதி செய்வது எமது தார்மீகப் பொறுப்பாகும். பாதிக்கப்பட்ட மக்கள் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்புவதை உறுதி செய்யும் அதே வேளை, மாகாணத்தின் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களையும் எவ்வித தாமதமுமின்றித் துரித கதியில் நிறைவு செய்ய வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் அனைத்துத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களுடனான அவசர உயர் மட்டக் கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர்,

“ஒவ்வொரு மாவட்டமும் வெவ்வேறு விதமான பாதிப்புகளைச் சந்தித்துள்ளன. குறிப்பாக உடைப்பெடுத்த குளங்களை அண்மித்த பகுதிகளில் மக்கள் மிகப் பெரிய இழப்புகளைச் சந்தித்துள்ளனர். பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் இயல்பு நிலையைத் துரிதமாக ஏற்படுத்த வேண்டும் என்பதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உறுதியான வலியுறுத்தலாகும்.

அதிகாரிகள் தற்துணிவுடன் செயற்பட வேண்டும். உங்களிடம் நேர்மை இருக்குமாயின்,எதற்கும்அஞ்சத்தேவையில்லை. துணிந்து முடிவுகளை எடுங்கள். உங்களின் தயக்கத்தாலோ அல்லது தற்துணிவின்மையாலோ மக்களுக்கான சேவைகள் ஒருபோதும் தாமதமடையக் கூடாது.” – என்று சுட்டிக்காட்டினார்.

விவசாய மற்றும் கால்நடை இழப்பீடுகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய ஆளுநர்,

“பாதிக்கப்பட்ட மக்கள் தமது இழப்புக்களைப் பதிவு செய்ய அலுவலகங்களுக்கு வரும் வரை காத்திருக்க வேண்டாம். நீங்களே நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுப் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். அத்துடன், மீள் விதைப்புச் செய்யக்கூடிய இடங்களில் அதற்கான உடனடி நடவடிக்கைகளை முன்னெடுங்கள்.

நிதியை விடுவிப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. அரச சுற்றறிக்கைகளுக்கு அப்பால் வடக்கு மாகாணத்துக்கு விசேட நிதியுதவி தேவைப்படின், அதனைக் கோருவதற்கும் நாம் தயாராக உள்ளோம்.

வாழ்வாதாரங்களை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை மீளக்கட்டியெழுப்புவது நம் அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும்.” – என்றார்.

விவசாயம் மற்றும் கால்நடைத் துறை சவால்கள் இதன்போது கருத்துத் தெரிவித்த விவசாய அமைச்சின் செயலாளர், வெள்ளம் காரணமாக வயல் நிலங்களில் குவிந்துள்ள வீதி எச்சங்களை அகற்றுதல், மீள் விதைப்புச் செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் பயிர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்த் தாக்கங்கள் குறித்தும், அதனால் எதிர்காலத்தில் விளைச்சல் குறையக்கூடிய அபாயம் குறித்தும் விளக்கமளித்தார்.

அதேவேளை, கால்நடைகளுக்கான தொடர் சிகிச்சை முகாம்கள் நடத்தப்



படுவதாகவும், மருந்துகள் இலவசமாக வழங்கப்படுவதாகவும்கால்நடைஉற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம்மற்றும்பேரிடரால்ஏற்பட்டபின்னடைவுகள் குறித்தும் ஒவ்வொரு அமைச்சு ரீதியாக ஆராயப்பட்டது. பௌதீக ரீதியாக வேலைகள் முடிவுற்ற போதிலும், சிட்டைகள் வழங்கல் தாமதத்தால் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அனர்த்தத்தால் ஏற்பட்ட விரிவான இழப்பீட்டு மதிப்பீட்டை ஜனாதிபதி செயலகத்துக்கு விரைவாக அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் இதன்போது பணித்தார்.

இந்தக்கலந்துரையாடலின்நிறைவில், வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வடிவமைக்கப்பட்ட, முறைப்பாடுகளை இலகுவாக முன்வைப்பதற்கான புதிய செயலி ஆளுநரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில்வடக்குமாகாணபிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.














நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தரவுகள் பிழைத்தால்....!

யாழ்குடா நாட்டை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில், யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த ராஜன் சில பிரமுகர்களைச் சந்தித்த போது ஒரு விடயத்தை - யதார்த்த நிலைமையை - விசனத்துடன் சுட்டிக்காட்டினார்.

“தலைவர்கள் சரியாக இருந்தாலும், தகவல்கள் பிழைத்தால் என்ன செய்ய முடியும்?” - என்று கேட்டார் அவர்.

இன்று பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணங்களை - மீட்பு நடவடிக்கைகளை - விரைந்தும், வினைத்திறன் உள்ள வகையிலும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தீவிர முயற்சி எடுத்து வருகிறார்.

அந்தப் பணியை செவ்வனே மேற்கொள்வதற்கு பேரிடரால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து முறையான தகவல் - தரவு - சேகரிப்பு மிக முக்கியமாகும்.

மலையக அரசியல் அரங்கம் சுட்டிக் காட்டி இருப்பது போல, பேரிடர் மீட்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒக்கீடுகள் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்கு தரவுகளும் தகவல்களும் மிகவும் முக்கியமானவை.

பேரிடர் பாதித்த மாவட்டங்கள் தோறும் சென்று அதிகாரிகளைச் சந்திக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தரவுகளும் தகவல்களும் கனகச்சிதமானவையாகவும், சரியானவையாகவும், துல்லியமானவையாகவும், ஒன்றுக்கு இரண்டு தடவைகளாவது உறுதிப்படுத்தப்பட்டனவாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறார்.

தரவு சேகரிப்பில் தவறு நிகழ்ந்தால் நாட்டின் மீளெழுச்சி அடிபட்டுப் போகும்.

பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நுவரெலியாவும் ஒன்று. அங்கு தரவு சேகரிப்பு ஒழுங்காக நடக்கவில்லை என்று மலையக அரசியல் அரங்கம் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

அதேபோல வடக்கில் வீடுகள் மறு சீரமைப்பு தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விடயத்தில் குளறுபடிகள் நடந்து, அளவுக்கு அதிகமான நிதி தேவையற்று வீண்விரயம் செய்யப்படும் அல்லது முறைகேடு இடம்பெறும் சாத்தியங்கள் உள்ளன என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

தகவல்கள், தரவுகள் பிழைத்தால் தலைமைகளின் முடிவுகளும் தவறுக்கு வழி செய்வனவாக அமைந்து விடும். இதனை ஜனாதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும்.

லஞ்சம், ஊழல், முறைகேடுகள், அரச நிதி துஷ்பிரயோகம், தவறான நிர்வாகம் போன்றவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காட்டிக்கொள்ளும் இந்த அரசாங்கம், எழுந்தமானமான - பொறுப்பற்ற - தரவு சேகரிப்பு மூலம் இடம்பெறக்கூடிய முறைகேடுகள், மோசடிகளைக் கட்டுப்படுத்தவும் கவனம் எடுக்க வேண்டும்.







# அனைவருக்கும் பாதுகாப்பான வாழ்க்கையை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

ஒவ்வொரு பிரஜைக்கும் பாதுகாப்பான வாழ்க்கையைப் பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும், மக்களை மீள்குடியேற்றும்போது முறையான மேற்பார்வையுடன் செயல்படுவது அனைவரின் பொறுப்பு எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக இந்த வருடத்தில் அரசாங்கம் வழங்கிய நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட அனைத்து மறுசீரமைப்புகளையும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறும் அந்த நிதி ஒதுக்கீடுகளைமீளத்திருப்பிஅனுப்பவேண்டாம் என்றும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தினார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அன்றாட இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகளில் எந்தப் பற்றாக்குறையும் கிடையாது என்றும் இந்த அவசரகால நிலையில் வரம்புகளைப் பொருட்படுத்தாமல்,அனைத்துநிறுவனங்களும் தங்கள் பொறுப்புகளை நன்கு ஒருங்கிணைந்து நிறைவேற்றுவதே அவசியமானது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பதுளை மாவட்டத்தில் இயல்புநிலையைமீளக்கட்டியெழுப்புவதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்வதற்காகவும் நேற்று ஊவா மாகாண நுலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் 19,133 குடும்பங்களைச் சேர்ந்த 64,140 பேர் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். 418 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 7,703 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த வீதிகளை மீளமைப்பது, மின்சாரம், நீர் வழங்கல், தகவல் தொடர்பு, நீர்ப்பாசனம் மற்றும் ஏனைய அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை மீளக் கட்டியெழுப்புவது மற்றும் விவசாயம், கால்நடைத் துறை, நன்னீர் மீன்பிடி, சுகாதாரம், கல்வி போன்ற துறைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஜனாதிபதி தனித்தனியாக கேட்டறிந்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி சபை வீதிகள் எனப் பிரித்துப் பார்க்காமல் அனைத்து வீதிகளின் புனரமைப்பு பணிகளையும் சமாந்தரமாக மேற்கொள்ள வேண்டிய

தொடர்ச்சி▼







# அனைவருக்கும் பாதுகாப்பான வாழ்க்கையை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

தன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதற்கான நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாவிட்டால் தேவையான நிதியைக் கோருமாறும் அவர் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

மாவட்டத்தில் நிரந்தர மறுசீரமைப்பு அவசியமான அனைத்து வீதிகளின் மதிப்பீட்டையும் தயாரித்து சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார். ஜனவரி மாதத்திற்குள் இந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான நிதியை வழங்க முடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அனர்த்தம் காரணமாக துண்டிக்கப்பட்ட 90 வீத மாவட்ட மின்சார விநியோகம் தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எஞ்சியதை துரிதமாக மீளமைத்து வருவதாகவும் அதேவேளை தேவைக்கேற்ப மாவட்டத்தில்நீர்விநியோகம்வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் 15,000 ரூபா கொடுப்பனவை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார்.



பதுளை மாவட்டத்தில் 6,711 ஏக்கர் விவசாயக் காணிகள் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையையும் விவசாய நிலங்களின் அளவையும் மதிப்பீடு செய்து உடனடியாக இழப்பீடு வழங்கி மீண்டும் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பெரும் போகத்தில் பயிற்செய்கைகளை மீண்டும் தொடங்குவதற்காக விவசாய நிலங்களுக்கு தற்காலிக நீர் விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அனர்த்தத்தினால் சேதமடைந்த விகாரைகள் மற்றும் மதத் தலங்களை சுத்திகரிப்பு செய்வதற்காக கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக 25,000 ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அது தொடர்பில் இந்த வாரம் அமைச்சரவை முடிவு எடுக்கப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அழிந்த மற்றும் சேதமடைந்த வீடுகளுக்கான இழப்பீடு வழங்குவது மற்றும் மக்களை மீள்குடியேற்றம் செய்வது குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

பராமரிப்பு முகாம்களில் வசிக்கும் மக்களின் மனநல மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டிய தன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்த அனைத்துப் பணிகளிலும் எல்லையற்ற அர்ப்பணிப்புடன் பணியாற்றும் முப்படைகள், அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது நன்றியைத் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.





# நுவரெலியாவில் பெருந்தோட்டத்தின் பயன்பாட்டிற்கு அப்பாற்பட்ட வீதிகள் அரசால் கையகப்படுத்தப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் தோட்டப் பகுதிகளில் பிரதான நகரத்துடன் பொது மக்களுக்கு தொடர்புகளை ஏற்படுத்தும், வீதிகள் அரசினால் கையகப் படுத்தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு, கருத்துரைக்கும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கை யில்,

“இந்த மாவட்டத்தில் உள்ள பல வீதி கள், எந்தவொரு அரசாங்க நிறுவனத் திற்கும் சொந்தமில்லாமல், தனியார் தோட்ட நிறுவனங்களின் உடைமையாக இருக்கின்றன.

பொதுமக்கள் இந்த வீதிகளைப் பயன்படுத்தினாலும்,பிரதேச சபைக ளுக்குச் சட்டப்படி இவற்றைச் சீரமைக்க அதிகாரம் இல்லாததால், வீதிகளை யார் பராமரிப்பது என்பதில் தோட்ட நிர்வாக மும் பிரதேச சபையும் மாறி மாறிப் பொறுப் புத் தட்டிக் கழிக்கின்றன.

பெருந்தோட்டம் சீரமைக்கும் என்று பிரதேச சபையும், பிரதேச சபை சீரமைக் கும் என்று தோட்டமும் காத்திருப்பதால், நுவரெலியாவில் பல பகுதிகளில் இன் னும் ஈருருளிகள் கூடச் செல்ல முடியாத அளவுக்கு மோசமான, பழங்கால வீதி கள் காணப்படுகின்றன.

இந்தச் சிக்கலான நிலையை முடிவுக் குக் கொண்டு வர, பெருந்தோட்ட பகு திகளில் இருக்கும் வீதிகள், தோட்டச் செயல்பாடுகளுக்கு அப்பால் பிரதான நகரங்களுடனும் பொதுப் போக்குவரத் துடனும் தொடர்பை ஏற்படுத்தினால், அந்த வீதிகள் உடனடியாக அரசினால் கையகப்படுத்தப்பட வேண்டும்.

மாறாக, ஒரு வீதி தோட்டத்தின் செயல் பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டால், அது தோட்ட நிறுவனத்திடமே இருக் கும்.

பொதுமக்கள் தோட்டத்தின் வேலை களுக்கு மட்டுமல்லாமல், பிற பொதுக் காரியங்களுக்கும் இந்த வீதகளைப்

தொடர்ச்சி▼











# நுவரெலியாவில் பெருந்தோட்டத்தின் பயன்பாட்டிற்கு அப்பாற்பட்ட வீதிகள் அரசால் கையகப்படுத்தப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

பயன்படுத்துவதால், பிரதான நகரங்களுடன் தொடர்புபடுத்தும் வீதிகளைக் கையகப்படுத்தி, அவற்றை முறையான பராமரிப்புக்காகப் பிரதேச சபைக்கோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கோ ஒப்படைப்பது அரசின் பொறுப்பாகும்.

இந்தப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர, கையகப்படுத்தும் பணிகளை விரைந்து முடித்து, பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் அன்றாடப் போக்குவரத்துச் சவால்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்." என்று தெரிவித்தார்.












# இலங்கையை வந்தடைந்தன சீனாவின் நிவாரண பொருள்கள்

சீனாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட 400 மில்லியன் ரூபா மதிப்புள்ள நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த

தொடர்ச்சி▼













# இலங்கையை வந்தடைந்தன சீனாவின் நிவாரண பொருள்கள்

தொடர்ச்சி▲

விமானம் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

சீனாவின் ஷாங்காயிலிருந்து போயிங் 747-400 ரக பெரிய சரக்கு விமானம் வந்துள்ளது.

இந்த நிவாரணப் பொருள்களில் உயிர்காப்பு அங்கிகள், கூடாரங்கள், போர்வைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவை அடங்குகின்றன என்று கூறப்படுகிறது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர மற்றும் இலங்கைக்கான சீனத் தூதர் ஜி சாங்ஹோங் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# உண்மையான பிரச்சினைகளைத் திசை திருப்பவே வந்தே மாதரம்பாடலை பா.ஜ.க. பயன்படுத்துகிறது

## மக்களவையில் பிரியங்கா காந்தி சாடல்



நாட்டின் உண்மையான பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பவே 'வந்தே மாதரம்' பாடலை பா.ஜ.க. பயன்படுத்துகிறது என்று மக்களவையில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த 'வந்தே மாதரம்' பாடலின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு, அது குறித்த விவாதம் மக்களவையில் நேற்று தொடங்கியது. பிரதமர் மோடி விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசினார். இதையடுத்து, பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள்.

விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வதேரா,

"இந்த விவாதத்தை நீங்கள் ஏன் கொண்டு வந்தீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இதற்கு முதல் காரணம், தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தை நீங்கள் விரும்பவில்லை. இரண்டாவது காரணம், வர இருக்கும் மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தல்.

உண்மையான சுதந்திரப் போராட்ட வீரர்களின் புகழ் வெளிச்சத்தை நீங்கள் பறிக்க விரும்புகிறீர்கள். நீங்கள் கடந்த காலத்தில் வாழ்கிறீர்கள். எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க விரும்பவில்லை.

பிரதமர் அழகாக உரைகளை நிகழ்த்துகிறார். ஆனால், அவற்றில் உண்மை இல்லை. வந்தே மாதரத்தை முதன்முறையாக ரவீந்திரநாத் தாகூர் ஒரு மாநாட்டில் பாடியதாக பிரதமர் மோடி கூறினார். ஆனால், அது காங்கிரஸ் மாநாடு என்பதை அவர் கூற மறந்துவிட்டார்.

வந்தே மாதரம் பாடலை பயன்படுத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நேதாஜிக்கு நேரு கடிதம் எழுதினார் என மோடி கூறினார். ஆனால், அதற்கு மூன்று நாள்களுக்கு முன்பாக, இதுபற்றி கொல்கத்தா காங்கிரஸில் விவாதிக்குமாறு நேருவுக்கு நேதாஜி கடிதம் எழுதினார்.

நேரு உட்பட பல சுதந்திரப் போராட்ட வீரர்களை நீங்கள் அவமதிக்கிறீர்கள். நீங்கள் அரசமைப்பு சபையைக் குறை கூறுகிறீர்கள். நேரு நாட்டுக்காக 12 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்தார். அவர் இல்லாமல் இருந்திருந்தால் எந்த ஐ.ஐ.டியும், ஐ.ஐ.எம்-மும் இருந்திருக்காது. நீங்கள் விற்கும் ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனத்தையும் உருவாக்கியவர் நேரு.

விலைவாசி உயர்வு, வேலையின்மை ஆகியவையே இன்றைய பிரச்சினை. அதுபற்றி நாம் பேசலாம். உண்மையான பிரச்சினைகளை புறக்கணிக்க உருவாக்கப்பட்ட திசை திருப்பும் தந்திரமே இந்த விவாதம்.

நாங்கள் தோற்றாலும் நாட்டின் உண்மையான பிரச்சினைகளைப் பற்றிப் பேச நாங்கள் இங்கு மீண்டும் வருவோம். 1830 களில் இருந்து காங்கிரஸ் ஒவ்வொரு மாநாட்டிலும் வந்தே மாதரம் பாடலை பாடுகிறது. நீங்கள் எத்தனை முறை பாடியுள்ளீர்கள். தேசியப் பாடலைப் பற்றி விவாதம் செய்வது பாவம்." என்று தெரிவித்தார்.

## திருப்பரங்குன்றம் விவகாரம்:

# நீதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்




திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக உயர்நீதிமன்றநீதிபதிஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாக வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என ராமரவிக்குமார் என்பவர் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இந்த உத்தரவுபடி தீபத்தூணில் தீபம் ஏற்றப்படவில்லை.

தீபம் ஏற்றச் சென்ற மனுதாரர் மற்றும் பா.ஜ.கவினர், இந்து முன்னணி மற்றும் இந்து அமைப்புகளை சேர்ந்தவர்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்டனர். நீதிபதியின் இந்த தீர்ப்பை கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தை கட்சி மற்றும் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் விமர்சனம் செய்தன.

இந்நிலையில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாக உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பா.ஜ.க, இந்து முன்னணி மற்றும் சார்பு இயக்கங்களைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது வழக்கறிஞர்கள் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாகவும், அவரது தீர்ப்பை விமர்சித்த மதுரை எம்பி சு.வெங்கடேசன் மற்றும் மாநில அரசுக்கு எதிராகவும், 'நீதித்துறையின் மாண்பை காப்போம், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றும் வரை விடமாட்டோம்' என கோஷம் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 70 இற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.




# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது

ஜப்பான் நாட்டின் வடக்கு கடற்கரைப் பகுதிக்கு அருகில் நேற்று க்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவு கோலில் இது 7.6 எனப் பதிவாகி யுள்ளது.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, ஜப்பான் அரசு உடனடியாக சுனாமி எச்சரிக்கை விடுத்துள்ளது. கடல் அலை கள் 10 அடி உயரம் வரை எழ வாய்ப்புள் ளது என்றும், மக்கள் அனைவரும் கட லோரப் பகுதிகளில் இருந்து உடனடி யாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும் அறிவுறுத் தப்பட்டுள்ளது. அமெரிக்க புவியியல் ஆய்வின்படி 53.1 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

ஜப்பானின் ஆமோரி மற்றும் ஹொக் கைடோ கடற்கரைப் பகுதிகளுக்கு அப்பால் தாக்கிய இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் கட்டிடங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகி றது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப் புகள் மற்றும் உயிர்ச் சேதங்கள் குறித்த முழுமையான தகவல்கள் இதுவரை எதுவும் வெளியாகவில்லை. நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவ தாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சேதத்தின் அளவை மதிப்பிடுவ தற்கு அவசர பணிக்குழு அமைக்கப் பட்டுள்ளதாகவும், மக்களின் உயிருக்கு முதலிடம் கொடுத்து, எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம் என்றும் ஜப்பான் பிரதமர் சானே டகாய்ச்சி தெரி வித்துள்ளார்.





# தாய்லாந்து - கம்போடியா இடையே மீண்டும் போர் பதற்றம் அதிகரித்தது



தாய்லாந்து கம்போடியா ஆகிய நாடுகளுக்கிடையில் சர்ச்சைக்குரிய எல்லைபிரச்சினை தொடர்பாக நீண்ட கால மோதல் நிலவிவருகின்ற நிலையில் இருநாடுகளுக்கிடையில் மீண்டும் போர் பதற்றம் அதிகரித்துள்ளது

இதன்காரணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தாய்லாந்து கம்போடியா எல்லைபகுதியில் இருந்து வெளியேறிவருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தாய்லாந்து கம்போடியா ஆகிய நாடுகளுக்கிடையில் சர்ச்சைக்குரிய எல்லை பிரச்சினைதொடர்பாகநீண்டகாலமோதல் நிலவிவருகின்ற நிலையில் தாய்லாந்து நேற்று கம்போடியா மீது வான்வழி தாக்குதலை மேற்கொண்டுள்ளது

எல்லைப்பகுதியில் கம்போடியா துப்பாக்கி சூடு நடாத்தியதாகவும் இதில் பாதுகாப்பு படைவீரர் ஒருவரி உயிரிழந்த சம்பவத்திற்கு பதிலடியாகவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தாய்லாந்து தெரிவித்துள்ளது

இதேவேளை கம்போடியாவில் தாய்லாந்து மேற்கொண்ட பதில் தாக்குதலில் பொதுமக்கள் நால்வர் உயிரிழந்துள்ளனர்

இந்த மோதல் காரணமாக இருநாடுகளுக்கிடையில் தற்போது போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இருநாடுகளுக்கிடையில் போர்பதற்றம் அதிகரித்துவரும் நிலையில் தாய்லாந்து -கம்போடியா எல்லைப்பகுதியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வெளியேறிவருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீ; ஒருவர் பலி, 40 வீடுகள் தீக்கிரை,





அவுஸ்திரேலிய மாநிலங்களில் சுமார் 40 வீடுகளை அழித்த கட்டுத்தீயை எதிர்த்துப் போராடிய தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நியூ சவுத் வேல்ஸ் நகரமான புலஹ்தேலா அருகே ஞாயிற்றுக்கிழமை இரவு 3,500 ஹெக்டேர் (8,650 ஏக்கர்) வனப்பகுதியை நாசமாக்கி, நான்கு வீடுகளை அழித்த காட்டுத்தீயை அணைக்கும் போது இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தீயணைப்பு பணியின் போது, 59 வயதான நபர் மீது மரம் விழுந்ததால் உயிரிழப்பு ஏற்பட்டதாக கிராமப்புற தீயணைப்பு சேவை ஆணையர் ட்ரெண்ட் கர்டின் தெரிவித்தார்.

டாஸ்மேனியாவின் டால்பின் சாண்ட்ஸில் ஏற்பட்ட காட்டுத்தீயால் 30க்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது சேதமடைந்துள்ளன.

அங்கு 19 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. மேலும் 14 வீடுகள் சேதமடைந்துள்ளன.

கொட்டகைகள் மற்றும் மின்சார உள்கட்டமைப்பு உட்பட 120க்கும் மேற்பட்ட சொத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.



# வெள்ளத்தில் சிக்கிய பஸ்ஸில் இருந்த பயணிகளை மீட்க துரித நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

## வடக்கு ஆளுநரிடம் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் கடிதம் கையளிப்பு

டித்வா பேரிடரின்போது புத்தளம் ஏ-12 வீதியில் பெருக்கெடுத்த கலா ஓயா வெள்ளத்தில் சிக்குண்ட பஸ்ஸிலிருந்து மீட்கப்பட்ட மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள், தமது மீட்பு நடவடிக்கைகளுக்குத் துரித நடவடிக்கை எடுத்தமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் நேற்று கடிதமொன்றைக் கையளித்தனர்.

ஆளுநர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது, பல்கலைக்கழக மாணவர்களின் உடல் மற்றும் உள நலம் குறித்து ஆளுநர் விசாரித்தறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, பேரிடரின் போது தாம் எதிர்கொண்ட சவாலான அனுபவங்களை மாணவர்கள் ஆளுநருடன் பகிர்ந்துகொண்டனர்.

இதன்போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்களது சக பயணி ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, பின்னர் சடலமாக மீட்கப்பட்ட துயரச் சம்பவம் குறித்தும், அந்தத் தருணத்தில் அவர்கள் எதிர்கொண்ட நெருக்கடி நிலை குறித்தும் ஆளுநரிடம் விவரித்தனர்.

மேலும், மீட்புப் பணிகளுக்காக வருகை தந்த மூன்று கடற்படை வீரர்கள், வெள்ளம் சூழ்ந்த அந்த ஆபத்தான சூழலில் 24 மணி நேரத்துக்கும் மேலாகத் தம்முடன் தங்கியிருந்ததோடு, வெள்ளத்தில் வீழ்ந்த சிலரையும் உயிருடன் மீட்டனர் என்பதையும் மாணவர்கள் ஆளுநரிடம் நினைவுகூர்ந்தனர்.

இத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அந்தக் கடற்படை வீரர்களைக் கௌரவிக்குமாறு ஜனாதிபதியிடம் பரிந்துரைக்குமாறும் மாணவர்கள் ஆளுநரிடம் விசேட வேண்டுகோள் விடுத்தனர்.

மிகவும் ஆபத்தான சூழலில், எவ்வித தாமதமுமின்றி மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும், விசேடமாக மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி வழிநடத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்ட மாணவர்கள், இந்த நன்றியுணர்வை வெளிப்படுத்தும் வகையிலான உத்தியோகபூர்வ கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தனர்.

மாணவர்களால் கையளிக்கப்பட்ட குறித்த கடிதத்தை, வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாகவே ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் அனுப்பி வைத்தார்.












# தமிழ் நாடு மாநில அரசுக்கு நன்றி தெரிவித்த இலங்கை

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணப் பொருள்களை அனுப்பியதற்காக தமிழக அரசுக்கு இலங்கை நன்றி தெரிவித்துள்ளது.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் தொலைபேசியில் உரையாடியபோது அரசாங்கத்தின் பாராட்டுகளைத் தெரிவித்தேன் என வெளியுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவுவதற்காக அரிசி, பருப்பு வகைகள், பால்மா, சீனி, ஆடைகள் மற்றும் போர்வைகள் உள்ளிட்ட 950 மெட்ரிக் தொன் மனிதாபிமான உதவிகளை தமிழ்நாடு அரசு அண்மையில் அனுப்பியது.

இந்த நிவாரணப் பொருள்கள் சென்னை மற்றும் தூத்துக்குடியில் இருந்து இந்திய கடற்படை கப்பல்களில் அனுப்பப்பட்டன.

இந்த ஆதரவு ஒரு கடினமான காலகட்டத்தில் அரசின் ஒற்றுமையைப் பிரதிபலிப்பதாகவும், இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான மக்கள் உறவுகள் தொடர்ந்து வலுப்பெறும் என்றும் விஜித் ஹேரத் கூறினார்.

மீட்பு முயற்சிகள் முன்னேறும் போது நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியத்திலிருந்து அனர்த்தத்தால் பாதித்தோருக்கு நிதியுதவி வழங்கல்

பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியத்தினால் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்க நிதியத்திற்கு 250 மில்லியன் ரூபா பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் பையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உள்ளிட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதிய பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



# இராஜதுரை மறைவுக்கு தமிழரசு கவலை





இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவத்துக்குரிய 'சொல்லின் செல்வர்' செல்லையா இராஜதுரை அவர்கள் தனது 98 ஆவது வயதில் மரணித்தமையைக் கேள்வியுற்று கட்சியின் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றோம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

இவர் தந்தை செல்வாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1956 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பில் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராக மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர். 1967 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது முதல்வராகவும் கடமையாற்றினார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை மட்டக்களப்பு மாவட்டத்திலே மக்கள் மத்தியில் பிரபலப்படுத்திய முதல் பெருமை திரு. இராசதுரை அவர்களையே சாரும். ஆனால் வடக்கு கிழக்கு முழுவதிலும் தனது சொல் வன்மையினாலும் மேடைப் பேச்சுக்களினாலும் எமது கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதிலே மிக முக்கிய பங்கு வகித்தவர். அவரது பேச்சாற்றலின் காரணமாகவே 'சொல்லின் செல்வர்' என்ற பட்டம் சூட்டப்பட்டவர்.

1979 ஆம் ஆண்டு கட்சியை விட்டு விலகி அன்றைய அரசோடு சேர்ந்து பணியாற்றியிருந்த போதிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் அமரர் இராசதுரை அவர்களின் சரிதத்திற்கு நீங்கா இடமொன்று உண்டு என்பதை அவரது மரணத்தால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்வதோடு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். – என்று உள்ளது.

# கண்டி மாவட்ட மு.கா. மத்திய குழுவின் அவசரக்கூட்டம்: ஹக்கீமின் தலைமையில் அனர்த்தப் பாதிப்புகள் ஆராய்வு











நாட்டில் நிலவிய அசாதாரண கால நிலையின் விளைவாக,அதிக அளவிலான உயிரிழப்புகளும் உடைமை இழப்புகளும் சம்பவித்துள்ள சூழ்நிலையில், கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் அவசரக் கூட்டமொன்று, கட்சியின் கண்டி பிரதான அலுவலகத்தில் நேற்றுத் திங்கள் கிழமை மாலை தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் கண்டி மாவட்ட மத்திய குழுவின் செயலாளரும், உயர்பீட உறுப்பினருமான எஸ்.ஏ.இத்ரீஸ், மாவட்டத்தின் ஏனைய உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட மாவட்ட மத்திய குழுவின் உறுப்பினர்கள் பங்குபற்றி கலந்துரையாடியுள்ளனர்.

முக்கியமாக பாதிக்கப்பட்ட பல்வேறு பிரதேசங்களிலும் குறிப்பாக கம்பளை, கெலிஓய,கலுகமுவ முதலான இடங்களில் குவிந்துள்ள குப்பை கூளங்களை உரிய முறையில் அப்புறப்படுத்தி, துப்புரவுப் பணிகளைத் துரிதப்படுத்துவதன் அவசியம் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது .

வெளியூர்களிலிருந்தும் வருகை தரும் தொண்டர்களின் பங்களிப்புடன் இவ்வாறான அவசர நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து இதன் போது விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கம்பளையில் ஏற்பட்ட அனர்த்தப் பாதிப்புகள் தொடர்பில் கம்பளை நகரசபை தவிசாளர் இறுகா வீரரத்தினவை சந்தித்து மு.கா தலைவர் ஹக்கீம் உரையாடியிருந்தார்.அத்துடன்,பாதிக்கப்பட்ட பல இடங்களுக்கும் சென்று நேரில் அவதானித்திருந்தார்.

# வவுனியா வடகாடு கிராமத்தில் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

## சத்தியலிங்கம் எம்.பி. நேரில் சென்று வழங்கிவைப்பு



வவுனியா மாவட்டத்தில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக செட்டிகுளம் பகுதி கடுமையாக பாதிப்படைந்தது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் வடக்கு – கிழக்கு மறுவாழ்வு அமைப்பினூடாக நேற்று செட்டிகுளம் பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட வடகாடு கிராமத்தை சேர்ந்த பாதிக்கப்பட்ட 48 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் செட்டிகுளம் பிரதேசசபையின் உபதவிசாளர் தே.சிவானந்தராசா (ஜெகன்), கட்சியின் வவுனியா மாவட்ட உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளருமாகிய பாலச்சந்திரன் சிந்துஜன், வட்டார பிரதேசசபை உறுப்பினர் சனோஜன், கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் ந.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் சி.சந்திரசேகரம், நாடாளுமன்ற உறுப்பினரின் செட்டிகுளம் பிரிவு இணைப்பாளர் ச.பத்மசீலன் ஆகியோர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேரடியாக உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.









# ஊடகவியலாளர்களுக்கு சலுகை அடிப்படையிலான திட்டங்களை கோருகிறது திகாமடுல்ல மீடியா போரம்

(றிபாஸ்)

பேரிடரால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணங்கள், உதவிகள் மற்றும் சலுகை அடிப்படையான கடன் திட்டங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என திகாமடுல்ல மீடியா போரத்தினால் அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்களுக்குள்ளான ஊடகவியலாளர்கள் தங்களது நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களையும், இன்னல்களையும் அனுபவித்திருந்தனர். பல்வேறு மாவட்டங்களில் களப்பணியில் ஈடுபடுகின்ற ஊடகவியலாளர்களது ஊடக உபகரணங்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன அல்லது செயலிழந்துள்ளன.

இதனால், தங்களது நாளாந்த செய்தி சேகரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியாத இன்னல்களுக்குஊடகவியலாளர்கள்முகம்கொடுத்திருந்தனர். மேலும் 10 நாள்களுக்கு மேலாக அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் மின்சாரம் தடைபட்டிருந்தமையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களின் ஊடக செயற்பாடுகள் முற்றாக முடக்கம் கண்டிருந்தன.

இவ்வாறான நிலைமைகளை கருத்தில் கொண்டு, இந்த இக்கட்டான நிலைமைகளுக்கு மத்தியிலும் தங்களது ஊடக உபகரணங்களின் சேதங்களை கூட பொருள்படுத்தாமல் நாட்டின் நிலைமைகளை ஊடகங்களுக்கு அறிக்கை செய்து இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் இலங்கையினுடைய நிலைமைகளை அறிய செய்வதற்காக, களத்தில் நின்று பணியாற்றிய ஊடகவியலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

அண்மையில் ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண செயற்திட்டங்கள் மக்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாக அமைவதுடன், பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தரப்பினரையும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படவுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.


இந்த நிவாரணப் பொதியின் ஓர் அங்கமாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் ஊடக உபகரணங்கள், சலுகை அடிப்படையிலான கடன் வசதிகள், மின்சாரத் தடை மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் இன்மையினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான இழப்பீடுகள், ஊடகவியலாளர்களின் களப்பணிக்கான மோட்டார் சைக்கிள்கள், வீட்டு வசதிகள் மற்றும் உதவிகள் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும்” என அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

# இரத்தினவேலோனின் ‘நினைவழியா நூல்கள்’ வெளியீட்டு நிகழ்வு கொழும்பில் வரும் ஞாயிறு

புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் ‘நினைவழியா நூல்கள்’ (ஜீவநதி வெளியீடு) வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் (75, லோறன்ஸ் வீதி) பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை கலந்துகொள்கிறார்.



நூல் வெளியீட்டுரையை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திருமதி சுகந்தி இராஜகுலேந்திராவும், வாழ்த்துரைகளை இந்து வித்தியாவிருத்தி சங்கத்தின் தலைவர் கலாநிதி த.முத்துக்குமாரசாமியும், பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கமும், நூல் நயவுரைகளை எழுத்தாளர்கள் திருமதி பிரமிளா பிரதீபனும், காரைக்கவி கந்தையா பத்மானந்தனும் நிகழ்த்துவர்.

# மன்னாரில் இல்மனைற் அகழ்வு தொடர்பிலான கூட்டத்தைத் தடுத்து நிறுத்தினார் அரச அதிபர்

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இல்மனைற் அகழ்வது தொடர்பில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் இன்று நடத்த இருந்த கூட்டம் மாவட்ட அரச அதிபரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மன்னாரில் இல்மனைற் அகழ்வு தொடர்பில் சூழல் மதிப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு அமைய இன்று இடம்பெறவிருந்த கலந்துரையாடலே மாவட்ட அரச அதிபரின் எழுத்து மூலமான உத்தரவின் பெயரில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கை, ஜனாதிபதி வழங்கிய உத்தரவாதத்திற்கு முரணாக காணப்படுவாக குறிப்பிட்டே மாவட்ட அரச அதிபர் இக்கூட்டத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளார்.

கரையோரசூழல்பாதிகாப்புத்திணைக்களத்தின் அறிவித்தல் கடிதத்தில் சூழல் மதிப்பீடு செயற்பாட்ய் மேற்கொள்ளப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க அரசின் நிவாரணப் பொதிகளுடன் அந்நாட்டு விமானம் பலாலியில் தரையிறக்கம்

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் அமெரிக்க அரசின் நிவாரண பொதிகளுடன் கூடிய அமெரிக்க விமானம் நேற்றுக் காலை தரையிறங்கியது.

இந்த நிவாரணப் பொதிகள் அமெரிக்கா இராணுவத்தினரால் இலங்கை விமானப்படை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன்.

இதனொரு கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கான நிவாரணப் பொதிகள் இன்று மதியம் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனிடம் விமானப் படை அதிகாரிகளால் கையளிக்கப்பட்டன.

யாழ் மாவட்டத்துக்கென 192 பிறீமா நூடில்ஸ் பெட்டிகளும் 150 கோதுமை மா மூடைகளும் கையளிக்கப்பட்டன.












# தமிழ்நாடு அரசின் நிவாரணப் பொருள்களுடன் திருமலைக்கு வந்து சேர்ந்தது இந்தியக் கப்பல்



(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கையில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென தமிழ்நாடு மாநில அரசின் சார்பில் அனுப்பப்பட்ட 700 மெற்றிக் தொன் நிவாரண உதவிப் பொருள்களை எடுத்து வந்த இந்திய கடற்படை போர்க்கப்பல் ஐ.என்.எஸ்.கரியல் நேற்று திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலை இறங்குதுறையில் வைத்து பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா, நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் இலங்கைக்கான இந்தியாவின் யாழ். துணைத்தூதர் சாய் முரளி ஆகியோர் வரவேற்றனர்.

அதனை அடுத்து உலர் உணவுப் பொருள்கள், ஆடைகள், குடி தண்ணீர், மருந்துப் பொருள்கள் அடங்கிய 700 மெற்றிக் தொன் நிவாரணப்பொருட்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா விடம் துணைத்தூதர் சாய் முரளியினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இந்தியக் கடற்படையின் சாகர் பந்து நடவடிக்கை எனப் பெயரிடப்பட்ட இந்த மனிதாபிமான உதவி நடவடிக்கை சென்ற 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இந்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக துணைத் தூதர் சாய் முரளி ஊடகங்களுக்குக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

“இலங்கை, இந்தியாவின் நீண்ட கால நட்பு நாடு. டித்வா புயலினால் இலங்கைக்கு ஏற்பட்ட பாரிய அனர்த்தத்தை அடுத்து எமது அரசு உடனடியாக இலங்கைக்கு உதவியளிக்க முன்வந்தது. சாகர் பந்து என்ற இந்த மனிதாபிமான நடவடிக்கை மூலம் சென்ற 27 ஆம் திகதி முதல் பல்வேறு வகையிலான உதவிகளை வழங்குகின்றோம். பிராந்தியத்தில் எமது நாடே முதலில் இலங்கைக்கு உதவிகளை வழங்கியது. அது இன்னும் தொடரும்”– என்று கூறினார்.

இதற்கு முன்னர் சென்ற முதலாம் திகதி இந்தியக் கடற்படைக் கப்பல் ஐ.என்.எஸ்.சுகன்யா மூலம் 12 மெற்றிக் தொன் உதவி நிவாரணப் பொருள்கள் திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டிருந்தன.





# ஹஜ் செல்ல விசா பெறுவதற்கு மருத்துவச் சான்றிதழ் அவசியம்

(அஷ்ரப் ஏ சமத் )


இம்முறை இலங்கையிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்ல உள்ளவர்கள் கட்டாயமாக மருத்துவச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்பே சவுதி அரசாங்கம் விசா வழங்குவதாகவும் சவுதி அரசின் ஹஜ் பிரிவினர் தங்களுக்கு அறிவித்துள்ளனர் என்றும், மிகப் பாரதுரமான ஆறு நோய்கள்மற்றும்மருத்துவப்பிரச்சினைகளுக்கு அரச மருத்துவச் சான்றிதழை பெற்றுக் கெள்ளமாறு அறிவுறுத்தல்கள் கிட்டியுள்ளன என்றும் ஹஜ் கமிட்டியின் தலைவர் றியாஸ் மிஹ்லார் தெரிவித்தார்.



இலங்கையிலிருந்து ஹஜ் செல்பவர்களது மருத்துவச் சான்றிதழ்களைக் கண்கானிப்பதற்காக எமது கமிட்டியினால் வைத்திய அதிகாரி சிஹான் என்பவரை நியமித்துள்ளோம். நாடு முழுவதிலும் உள்ள அரச வைத்தியசாலைகளிலேயே ஹஜ் செல்ல உள்ளவர்கள் இம் முறை அரச மருத்துவச் சான்றிதழ்களைப் பெறல் வேண்டும். அச்சான்றிதழ்கள் எமது வைத்திய அதிகாரியின் ஊடாகப் பரிசிலனை செய்யப்படும். புற்று நோய், இதய நோய், சிறுநீரக நோய், கடுமையான சர்க்கரை வியாதி மற்றும் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு மேற்பபட்ட கர்ப்பம் போன்ற விடயங்களுக்கான மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறே சவூதி அரசாங்கம் வேண்டியுள்ளது.

பொய் மருத்துவச் சான்றிதழ்களை சமர்ப்பித்திருந்தால் அவர்கள் சவுதியில் பரிசீலித்து மீள அதே விமானத்தில் அனுப்பிவிடுவார்கள். அவர்களுக்கு ஹஜ் செய்ய முடியாமல் போகிவிடும். இம்முறை சவுதி அரேபியா ஹஜ் விடயத்தில் மிகவும் பல கடினமான நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும் ஹஜ் கமிட்டியின் தலைவர் றியாஸ் மிப்லார் தெரிவித்தார்.

# யாழில் வீடு மறுசீரமைப்புக்கான ரூ.25 ஆயிரம் நிதிக்கு பரிந்துரைக்க மறுக்கின்றனர் கிராம சேவையாளர்கள்!



(ந.லோகதயாளன்)

நிவாரணப் பொருள்க வழங்க மட்டுமே பரிந்துரைக்கின்றோம். வீடு மறுசீரமைப்பதற்கான பாதிப்பு பணம் வழங்க சிபார்சு செய்யவில்லை என யாழில் கிராம சேவையாளர்கள் ஒரு தொகுதியினர் போர்க்கொடி தூக்குகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட இடர்நிலையின் போது ஏனைய மாவட்டங்கள் அதிகம் பாதித்தபோது யாழ்ப்பாண மாவட்டம் பருவ மழையால் ஏற்படும் பாதிப்பினை எதிர்கொண்டது என்பதே பலரின் அபிப்பிராயமாக உள்ளது.

இவ்வாறு யாழில் ஏற்பட்ட பாதிப்பிற்கு அனர்த்த நிவாரனம் வழங்கினால் போதுமானது, மாறாக வீடு மறுசீரமைப்பு என்ற பெயரில் 25 ஆயிரம் ரூபா பணம் வழங்க வேண்டிய தேவை கிடையாது எனத் தெரிவித்து பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராம சேவையாளர்கள் அக்கொடுப்பனவுக்கான பரிந்துரைப் படிவங்களில் ஒப்பமிட மறுக்கின்றனர்.

ஒப்பமிட மறுக்கும் கிராம சேவையாளர்களிடம் அது தொடர்பில் எழுத்தில் கடிதம் கோரப்படுகின்றது.

இதேநேரம் சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிராம சேவையாளர்கள் ஒப்பமிட்டாலும், சமுர்த்தி உத்தியோகத்தர் அல்லது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒப்பமிட மறுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ். மாவட்ட நிதி விநியோகம் காலதாமதம் அடையலாம் எனத் தெரியவருகின்றது.

யாழில் பாதிப்பு நிவாரணம் வழங்க 36 கோடி ரூபா ஒதுக்கியமை தொடர்பில் கடும் விமர்சனம் முன் வைக்கப்படும் காலத்தில் தற்போது புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

# அனர்த்தங்கள் பற்றிய தரவு சேகரிப்பில் நுவரெலியா மாவட்ட மக்களுக்கு அநீதி

## மறுபரிசீலனை செய்யக் கோருகிறது மலையக அரசியல் அரங்கம்

டித்வா புயல் தாக்கத்தால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடி மிக்க தருணத்தில் இடர் முகாமைத்துவ நிலையத்தினால் தேசிய ரீதியாக விடுக்கப்படும் தகவல் அறிக்கைகளில் இலங்கையின் நுவரெலியா மாவட்ட மக்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்படுகிறது. இது அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணப் பணிகள், மீள் கட்டுமாணப் பணிகளை மாத்திரமல்லாது எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை முதல் சர்வதேச நாடுகள் நிறுவனங்கள் வழங்கக்கூடிய உதவிகள், நுவரெலியா மாவட்டத்துக்கு வந்து சேர்வதை தடுக்கும் அபாயத்தைக் கொண்டிருக்கிறது. எனவே இந்த விடயம் சார்ந்து உடனடி மறுபரிசீலனை அவசியம் என மலையக அரசியல் அரங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி விடயங்களைச் சுட்டிக்காட்டி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, இலங்கைககான ஐக்கிய நாடுகள் வதிவிட வதிவிட பிரதிநிதி, மனித உரிமைகள் பிரதிநிதி , ஐ.நா. அபிவிருத்தி திட்ட வதிவிட பிரதிநிதி ஆகியோருக்கு மலையக அரசியல் அரங்கம் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்துள்ள அதன் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கையை தாக்கிய டிடத்வா புயல் தாக்கத்ததை அடுத்து அரசாங்கம் பல நிவாரணத் திட்டங்களை அறிவித்துள்ளது. அதேபோல சர்வதேச நாடுகளும் நிறுவனங்களும் அதிகளவான உதவிகளை வழங்கி வருகின்றன. அவை முறையாக நாட்டு மக்களை சென்று சேர வேண்டுமெனில் முறையான தகவல் சேகரிப்பு அவசியமாகும். மாவட்டங்கள் தோறும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடாத்திவரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, நித ஒதுக்கீடுகள் சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்குத் தரவுகள், தகவல்கள் எந்நதளவக்கு முகியத்துவமானவை என்பதை அதிகாரிகளுக்க விளக்கி வருகிறார். எனினும் நுவரெலியா மாவட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தகவல்கள் குறித்த கலந்தரையாடல் ஏதும் இடம்பெற்றதாக தெரியவில்லை. அதிகாரிகளிடம்ம ஜனாதிபதி அது குறித்து எதுவும் கேள்வி எழுப்பவில்லை.

அதேநேரம் நுவெரலியா மாவட்ட அனர்த்த நிலைமைகள் தொடர்பாக கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி வழங்கப்பட்ட அதே தகவல் நிலைமையே டிசம்பர் மாதம் எட்டாம் திகதியும் வழங்கப்பட்டுளளது. நாட்டில் ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒரு வாரத்தில் முழுமையாக பாதிப்படைந்த வீடுகளின் எண்ணிக்கை கண்டி மாவட்டத்தில் 7 இலிலருந்து 1,800 ஆகவும், குருநாகல் மாவட்டத்தில் 71 இலிருந்து 480 ஆகவும், கோகலையில் 24 இலிருந்து 300 ஆகவும், புத்தளம் மாவட்டத்தில் பூஜ்ஜியத்தில் இருநது 573 ஆகவும் அதிகரிகரித்துள்ள போதும் நுவரெலியாவில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை. மொத்தமாக 15 வீடுகள் முழுமையாகவும் 453 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்து இருக்கின்றன என நுவெரலியா மாவட்டத் தகவல்கள் தொடர்பில் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட்டுள்ளது.

இந்தத் தரவுகள், தகவல்கள் சேகரிப்பில் காணப்படும் குறைபாடுகள் நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் தோட்டப்பகுதி மக்களைப் பாதிக்கக கூடியவை. ஏற்கனவே வறுமையின பிடியில் வாழும் நிரந்தர வீடற்ற, நிரந்தர தொழிலற்ற மக்களை மேலும் நலிவுற்றவர்களாக்க இந்த தகவல் குறைபாடு காரணமாகலாம்.

எனவே ஜனாதிபதியும் , ஐ.நா முகவர் நிறுனவங்களும் இந்த விடயத்தில் கவனத்துல் எடுத்து நுவரெலியா மாவட்டத்தில் நேர்மையான தகவல் சேகரிப்பு ஒன்றுக்கு வழி வகுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். இந்த கோரிக்கையை அக்கறையுள்ள அனைவரும் அவரவர தரப்பில் அரசாங்க உயர் பீடத்தின் கவனத்துக்க கொண்டு செல்ல வேண்டும் எனவம் கெட்டுககொள்கிறோம். - எனவும் தெரிவித்துள்ளார்.

| மாவட்டம் | 2025 டிசம்பர் மாதம் முதலாம (1) திகதி மாலை 6 மணி வரையான களநிலவரம் | | 2025 டிசம்பர் மாதம் எட்டாம் (8) திகதி மாலை 6 மணி வரையான களநிலவரம் | |
|---|---|---|---|---|
| | முழுமையான சேதமடைந்த வீடுகள் | பகுதியளவில் சேதமடைந்த வீடுகள் | முழுமையான சேதமடைந்த வீடுகள் | பகுதியளவில் சேதமடைந்த வீடுகள் |
| புத்தளம் | 00 | 72 | 573 | 4,696 |
| பதுளை | 226 | 3,058 | 404 | 7,291 |
| கோகலை | 24 | 2,949 | 300 | 11,515 |
| குருநாகல் | 71 | 699 | 480 | 3,395 |
| கம்பஹ | 22 | 800 | 152 | 5,200 |
| கண்டி | 7 | 390 | 1,800 | 13,044 |
| மொனராகல | 23 | 420 | 35 | 507 |
| கொழும்பு | 6 | 1,426 | 14 | 3,226 |
| மாத்தளை | 0 | 44 | 119 | 2,864 |
| **நுவரெலியா** | **15** | **453** | **15** | **453** |

# இன்றைய ராசி பலன்கள் - 09.12.2025




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.

நேர்மறையான எண்ணம் மற்றும் திட்டமிடல் மூலம் இன்று பதட்டமின்றி இருக்கலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை .

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.ய




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் ஃ மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.12.2025




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

கும்பம்




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# மட்டு. அம்பிட்டிய தேரரை 15ஆம் திகதிக்கு முன் கைது செய்யுமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு!

## இதுவரை கைது செய்யாதமை ஏன் என எஸ்.எஸ்.பியை பதிலிக்கக் கட்டளை

(கனகராசா சரவணன்)

“தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும்“ என்க்கூறிய வண. அம்பிட்டிய சுமண ரத்ன தேரருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குத் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் கைது செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்ட அவரை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கைது செய்து ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை பொலிஸாருக்கு உத்தரவிட்டது. அத்துடன் இது வரை ஏன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை என்பது தொடர்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

கடந்த 2023-10-23 திகதி ஊடகங்களுக்கு சுமணரட்ன தேரர் வழங்கிய செவியின் போது “வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும்“ எனத் தெரிவித்திருந்தார்.



இதையடுத்து இந்த தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக 2023-10-27 ஆம் திகதி கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி தனுக்க ரனஞ்சக என்பவர் முறைப்பாடு செய்தமையுடன் சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு அமைவான சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பான கோப்புகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் தேரரைக் கைது செய்து சட்ட நடவடிக்கையைத் தொடருமாறு அறிவுறுத்தல் வழங்கியது.

இந்த நிலையில் வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, தேரர் நீதிமன்றில் சமுகமளிக்காத நிலையில், வழக்கு தொடுநர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின் படி கைது செய்யப்பட்டிருக்க வேண்டிய தேரர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதை நீதவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்து நீதிவான் அடுத்த வழக்கு தவணை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தேரரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டமையுடன், தேரரை இதுவரை நீதிமன்றில் ஏன் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்டளை பிறப்பித்தார்.